DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **S.C.No. 17 of 2020** |
| **Deposition of witness for** | **:** | **PW- 8** |
| **Name** | **:** | மனோகர் |
| **Father's/Husband Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| **Village** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**12.11.2025**

**முதல் விசாரணை :**

நான் J.கொலக்கம்பையில் குடியிருக்கிறேன், நான் விவசாய கூலி வேலை செய்கிறேன். இவ்வழக்கில் இறந்துபோன பழனிசாமியையும், அ.சா.1 ராமசாமியையும், அ.சா.2 முருகேசனையும், அ.சா.3 துளசியையும், அ.சா.4 கீதாவையும், அ.சா.5 தனலட்சுமியையும், அ.சா.6 பொன்னுசாமியையும், இறந்துபோன பெள்ளியையும், இறந்துபோன லோகநாதனையும், அ.சா.7 மருதாச்சலத்தையும் தெரியும். நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் 1ஆம் எதிரி மகாதேவன், 2ஆம் எதிரி நவீன்குமார் மற்றும் 3ஆம் எதிரி ரமேஷ் ஆகியோரையும் தெரியும்.

தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை, தற்போது இருந்து சுமார் 4 வருடங்களுக்கு முன்பு பழனிசாமியின் அப்பா அ.சா.1 ராமசாமி என்னிடம் அவர் மகன் பழனிசாமி மருந்து குடித்துவிட்டார், வா என்று என்னை கூப்பிட்டார், நான் போவதற்கு முன்பே பழனிசாமி மருந்து குடித்து முடித்துவிட்டான், நான் பழனிசாமியை தோட்டத்தில் இருந்து ரோட்டுக்கு சுமார் 1 கிலோ மீட்டர் தூரத்திற்கு தூக்கி வந்தேன், உள்ளூரை சேர்ந்த மணிகண்டன் என்பவர் ஜீப்பில் பழனிசாமியை ஊட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தேன், அ.சா.1 ராமசாமி டாக்டரிடம் பேசினார், டாக்டர் பழனிசாமி இறந்துவிட்டதாக சொன்னார், அதன்பிறகு நாங்கள் எல்லாம் வீட்டுக்கு போய்விட்டோம். பழனிசாமி எதற்காக மருந்து குடித்தான் என்பது எனக்கு தெரியாது. போலிசார் இது சம்பந்தமாக என்னை கேட்டார்களா என்று கேட்டால், போலிசார் என்னை கேட்கவில்லை.

**<u>1,2 மற்றும் 3ஆம் எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**:

பழனிசாமி தோட்டத்தில் கிடந்த இடத்திற்கும், ஊருக்குள் இருக்கும் பழனிசாமியின் வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்று கேட்டால், சுமார் 1 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். பழனிசாமி கிடந்த தோட்டத்தின் பெயர் கரிலா தோட்டம் என்று சொன்னால், ஆமாம். பழனிசாமி வீட்டில் இருந்து அவர் கிடந்த கரிலா தோட்டத்திற்கு வண்டி எல்லாம் போகாது,

நடந்துதான் போக வேண்டும் என்று சொன்னால், ஆமாம். நான் பழனிசாமியை ஊட்டி ஆஸ்பத்திரிக்கு கூட்டி சென்றதாக சொல்லும் ஜீப்பில்தான் பழனிசாமியின் அம்மாவும், அப்பாவும் வந்தார்கள் என்று சொன்னால், ஆமாம்.

N.
MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.11.12 16:09:03 +0530